IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# எட்டுத்தொகையில் இயற்கை வளமும் வர்ணனைகளும்

**[1]கோ. கார்த்திகா, [2]பெ. இளையாப்பிள்ளை**

[1] ஆய்வாளர், [2]பேராசிரியர்

[1]இலக்கியத்துறை,

[1] தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், தமிழ்நாடு, இந்தியா.

***சுருக்கவுரை :*** முன்னோர் விட்டுச் சென்ற தரவுகள் தான் சங்க இலக்கியம். எட்டுத்தொகை நூல்கள் தமிழரின் பண்பாட்டுக் களஞ்சியமாகத் திகழ்கின்றது. தமிழ் மக்களுக்கு இயற்கையின் மேல் இருந்த ஈடுபாடும் இயற்கையைச் பாடலுக்குப் பின்னணியாக அமைக்கும் முறையும் வியப்பைத் தருகின்றன. சங்க இலக்கியத்தின் மூலம் தமிழரின் இயற்கை ஈடுபாட்டை ஆழமாக உணர்ந்து கொள்ளமுடியும். எட்டுத்தொகைப் பாடல்களில் காதல், வீரம், கொடை, நட்பு என பல்வேறு காட்சிகளைப் பதிவு செய்வதோடு மட்டும் நிறுத்திவிடாமல், அவர்களது அன்றாட வாழ்க்கையில் பின்னிப் பிணைந்த எண்ணிலடங்கா இயற்கை வளமும் வர்ணனைகளும் உள்ளடக்கியுள்ளன. மன்னன் முல்லைக் கொடிக்கு தேர் நல்கியது முதல் யானை புழுதி நீராடியது என எத்தனையோ இயற்கை காட்சிகளைப் புலவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். எட்டுத்தொகை நூல்களில் சங்ககால புலவர்கள் பாடிய பாடல்களில் காணப்படும் இயற்கை வளத்தையும் வர்ணனைகளை பற்றியும் அறிய முயல்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

***திறவுச்சொற்கள்*** - சங்க இலக்கியம், எட்டுத்தொகை, இயற்கை வர்ணனைகள்

**அ. முன்னுரை**

கற்பனை என்பது ஒன்றைப் புதிதாகப் படைக்கும் அல்லது உருவாக்கும் ஆற்றல் அல்லது இல்லாதவற்றை இருப்பதாக நினைத்துப் பார்த்தலாகும். புனைவும் கற்பனை அடிப்படையில் உருவாக்குவதுதான். வர்ணனை என்பது நேரில் சென்று பார்ப்பது போன்ற உணர்வினை ஏற்படுத்துவது. சங்ககால புலவர்களின் வர்ணனைகள் அப்படியொரு உணர்வை ஏற்படுத்துகின்றன.

**ஆ. அகநானூற்றில் இயற்கை வளமும் வர்ணனைகளும்**

குறிஞ்சிப்பாடுவதில் வல்லவரான கபிலர், அகநானூற்றில் ஒரு பாடலில் இயற்கையை வெகு அழகாக காட்சிப்படுத்துகின்றார். அப்பாடலைப் படிக்கும் போது குறிஞ்சி நிலப் பகுதிக்குச் சென்று வந்ததைப் போன்ற உணர்வு தோன்றும்.

ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கின்,
கோடை அவ்வளி குழலிசை யாகப்
பாடின் அருவிப் பனிநீர் இன்னிசைத்
தோடமை முழவின் துதைகுரலாகக்
கணக்கலை இகுக்கும் கடுங்குரல் தூம்பொடு
மலைப்பூஞ் சாரல் வண்டியாழ் ஆக,
இன்பல் இமிழிசை கேட்டுக் கலிசிறந்து,
மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவளர் அடுக்கத்து இயலிஆ டும்மயில்
நனவுப்புகு விறலியின் தோன்றும் நாடன். (அகம். 82)

கண்ணிற்கும் மனதிற்கும் விருந்தளிக்க கூடிய பசுமையான மலைப் பகுதி, அங்கு உள்ள மூங்கில் மரங்களை வண்டுகள் துளைத்துள்ளன. அத் துளையின் வழியே காற்றுப் புகுவதால் ஒலி எழுகின்றது. அவ்வொலி குழலிசையாக ஒலிக்கின்றது. அருவியில் இருந்து வீழும் நீரின் ஓசை இனிய முழவின் ஒலியை ஒத்து இருக்கின்றது.

மலைப் பகுதியல் விளையாடும் மான் இனங்கள் எழுப்பும் ஒலி பெருவாத்தியத்தின் இசையாக விளங்குகின்றது. அங்கு பறந்து திரியும் வண்டுகள் எழுப்பும் ஒலி யாழிசையாக மயக்குகின்றது. இவற்றையெல்லாம், அக்காட்டில் உள்ள குரங்குகள் வியந்து நோக்க, பக்கத்து மலைகளில் தோகை விரிந்து ஆடும் மயில்கள் விறலியர் போன்று தோன்றுகின்றனவாம். சங்ககால புலவர்கள் இயற்கையோடு ஒன்றி, அதனோடு வாழ்ந்து படைப்புக்களைப் படைத்துள்ளார்கள்.

### இ. நற்றிணையில் இயற்கை வளமும் வர்ணனைகளும்

புன்னை மரத்தின் அழகினைக் கூறும்பொழுது புன்னை மரம் இரும்பைப் போன்ற நிறமுடைய கரிய கிளைகளை உடையது. நீலம் போன்ற பசிய இலைகளை உடையது. அவ்விலைகளில் வெள்ளி போன்று மலர்ந்து விளங்கும் பூங்கொத்துகளின் நடுவிலிருந்து பொன்துகளை ஒத்துத் தோன்றும் மணமுடைய மகரந்தம் உதிரும். புலியினது மேற்புறம் போன்று புள்ளியைக் கொண்டும் நல்ல நிறம் கொண்டு பூக்களின் மணத்தைப் பெற்றும் அமைந்த மேற்பரப்பையுடைய, வரியையுடைய வண்டுகள் அவை புன்னை மலர்களில் வந்து தேன் பருகும். அங்ஙனம் நுகர்ந்த போது எழுந்த வண்டின் இசையைப் புலியின் ஓசையோ எனத் தேரில் பூட்டப்பெற்ற குதிரைகள் அஞ்சும் பல முறை இழுத்து நிறுத்தவும் நில்லாததாய் விரைவாக இயங்கும் குதிரையின் கால்கள் பந்தினைப் போலத் தாவின. இத்தகைய வளமுடைய சேரியில் கல்லென்றும் ஓசையுடன் தோன்றியது என்பதை,

"இரும்பின் அன்ன கருங் கோட்டுப் புன்னை
நீலத்து அன்ன பாசிலை அகம் தொறும்
வெள்ளி அன்ன விளங்கு இணர் நாப்பன்
பொன்னின் அன்ன நறுந் தாது உதிர" (நற்றிணை. 249)

என்ற பாடலின் மூலம் நெய்தல் நிலத்தின் இயற்கை வளத்தினை அறியமுடிகிறது.

### ஈ. குறுந்தொகையில் இயற்கை வளமும் வர்ணனைகளும்

காதலன் பிரிவால் தனிமை கொண்டு, நெஞ்சம் துன்பத்தால் ஓலமிடும் நெய்தல் தலைவிக்கு இணைப் பின்புலமாகிய அலையோசை எழுப்பும் கடலுக்கும் உணர்ச்சியுண்டு எனக்கருதும் தலைவியின் கூற்றைச் சுட்டுகிறது பின்வரும் குறுந்தொகை பாடல் வரிகள்.

“யாரணங் குற்றனை கடலே பூழியர்
சிறுதலை வெள்ளைத் தோடுபரந் தன்ன
மீன்ஆர் குறுகின் கானலம் பெருந்துறை
வெள்வீத் தாழை திரையலை
நள்ளென் கங்குலும் கேட்கும் நின் குரலே”. (குறுந்தொகை.163)

தலைவனைப் பிரிந்த மயக்கத்தால் இரவும் பகலும் உறங்காமல் துயர் கொண்ட தலைவி, ஓயாமல் அரற்றும் கடலை நோக்கி “நீ யார் பிரிவு பற்றி வருந்துகிறாய்?” என தன் நிலையோடு ஒப்பிட்டு, கடலின் நிலைக்கும் கலங்குகிறாள் தலைவி என்று சங்கப்புலவர்கள் உயிரற்ற பொருட்களுக்கும் உயிர் கொடுத்துப் பார்ப்பதுடன் உணர்ச்சியையும் ஏற்றி வர்ணித்துள்ளனர்.

### உ. ஐங்குறுநூறில் இயற்கை வளமும் வர்ணனைகளும்

சிப்பியில் பிறக்கும் முத்திலும் சங்கில் பிறக்கும் முத்து தான் சிறந்த முத்து என்பர் கடற்கரையில் வாழும் மீனவ குலத்தினர். ஆனால் தாம் கண்டெடுத்த சங்குகளில் இருந்து கிடைக்கும் முத்துக்களை ஏனைய நிலத்தில் வாழும் மக்களுக்கு விற்பனை செய்வார் என்பதை,

“வளைபடு முத்தம் பரதவர் பகரும்" (ஐங்குறுநூறு.195)

என்ற வரி சங்க கால இயற்கை வளத்தைப் பகருகிறது.

குறவர்களின் குடிசைகள் மலையில் உள்ளது. அத்தகைய குடிசைகளை மலை மறைக்கின்றது. இங்கு மலை, குறவனின் வீட்டை மறைக்கும் என்பது மலையின் மேல் மேகம் இறங்குவது போன்ற நிகழ்வாகும். இத்தகைய அழகிய இயற்கை சூழ்ந்த மலையில் குற இனத்தவர்கள் வாழ்ந்துள்ளனர் என்பது அவர்களின் இயற்கை வாழ்வை வர்ணனையுடன் புலப்படுத்தப்பட்டுள்ளது. இதனை,

"குன்றக் குறவன் புல்வேய் மும்பை மன்று
ஆடு இளமை மறைக்கும் நாடன்." (ஐங்குறுநூறு.252)

என்ற இப்பாடலின் மூலம் குறவரின் இயற்கை வாழ்வை அறிய முடிகின்றது.

**ஊ. புறநானூற்றில் இயற்கை வளமும் வர்ணனைகளும்**

புறநானூற்றிலும், வாழ்வியல் வருணனைகள் ஆங்காங்கே செறிவாகச் சொல்லப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, சிறு குழந்தையை வருணிக்கையில், மிகுந்த செல்வம் உடைய செல்வர்க்கும் குழந்தைச் செல்வம் இல்லையெனில், தம் வாழ்நாளில் புண்ணியப் பயனாக விட்டுச்செல்லக் கூடிய உயிர் நிலையில்லை என்பதை,

"படைப்புப் பலபடைத்துப் பலரோடுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லாத் தாம்வாழும் நாளே." (புறநானூறு.188)

குழந்தையின் நடையழகையும், தொட்டும் இட்டும் தவழ்ந்தும் விளையாடும் மகிழ்ச்சியையும் நெய்பிசைந்த சோற்றினை தம் மேலெல்லாம் பூசிக்கொண்டு அது செய்யும் குறும்பினையும் நம் கண்முன்னே ஓவியமாகத் தீட்டுகிறது இப்பாடல்.

**எ. கலித்தொகையில் இயற்கை வளமும் வர்ணனைகளும்**

சங்க கால புலவர்கள் வாழ்வியல் நெறியான அன்பினை இயற்கையொடு இணைத்து வர்ணனைகள் மூலம் தங்களது பாடல்களில் அற்புதமாக பாடியுள்ளனர். பாலைக்கலியில் உள்ள ஒரு பாடல், தலைவன் கூற்றின் மூலம் பாலை நிலத்தின் வெம்மை அழகாக வருணனை செய்யப்பட்டுள்ளது. பின்வரும் கலித்தொகை பாடல் அதற்கு ஓர் சிறந்த உதாரணம்.

"அடிதாங்கு மளவின்றி யழலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழா அய் காடென்றார் அக்காட்டுள்
துடியடிக் கயந்தலைக் கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே." (கலித்தொகை.11)

"காடுகள் நெருப்புப் போன்ற வெம்மையாலே அடியெடுத்து நடக்க முடியாதபடி கடுமையாக இருக்குமென்று கூறினார். அத்தகைய காட்டில் இருக்கும் யானையானது, தன் குட்டிகள் கலக்கிய சிறிய நீரைக் கூட தன் பெண் யானை உண்ட பிறகுதான் தான் உண்ணும் என்று சொன்னாரே" என்று கூறப்படுகிறது. இந்தப் பாலை வருணனையில் அன்பின் ஊற்றம் அற்புதமாக வெளிப்படுகிறது.

**ஏ. முடிவுரை**

சங்க கால புலவர்களுக்கு இயற்கையின் மேல் இருந்த ஈடுபாடும் இயற்கையைச் செய்யுளுக்குப் பின்னணியாக அமைக்கும் முறையும் வியப்பைத் தருகின்றன. மானிட உணர்வுகளோடு இயற்கையின் எழிலை இயைபுறச் செய்வது பண்டைத் தமிழிலக்கிய மரபாகும். அத்தகைய இயற்கையினை பேணி காப்பது இன்றைய சமூகத்தின் கடமை. இயற்கையோடு இணைந்த வாழ்க்கை வாழ வேண்டுவது எல்லோரது அவசியமுமாகும்.

**துணைநூல்கள்**

1. புலியூர் தேசிகன், "எட்டுத்தொகையும் பத்துபாட்டும்," (14 நூல்கள் கொண்ட தொகுப்பு), ஸ்ரீ செண்பகா பதிப்பகம், முதற்பதிப்பு, 2020.